729
14


உ

சிவமயப் பொருள்.

பழ மதுரைப்

# பாண்டிமுனிப் பதிகமு
# ஆனந்தக்களிப்பும்.

-8 NOV 193



இ:ஃது

திரிசிராமலை யாதவர்புறம்

மதுரம். வடிவேற்சாமி வித்வான்

இயற்றியது.

சுவாமி சந்நிதிதெரு தேங்காய் பழக்கடை

சு. செல்லையா பிள்ளையால்

வெளியிடப்பட்டது.

O2998:38:2495
N35
171728.

உ

சிவமயப்பொருள்.

பழமதுரைப்

# பாண்டிமுனிப் பதிகம்

இஃது

OFFICE OF THE RE
-8 NO

திரிசிராமலை யாதவர்புரம்

மதுரம். வடிவேற்சாமி வித்வான்

இயற்றியது

மதுரைமாநகர் மன்மதன் எரிந்தகக்ஷி

ஜெயக்கொடி சரவணக்கவிராஜர் சீடன்

மதுரை சுவாமிசந்நிதிதெரு தேங்காய் பழக்கடை

க. மு. சு. செல்லையா பிள்ளை

அவர்களால்

மதுரை
விவேகாநந்தா பிரஸில்
அச்சிடப்பெற்றது

1935

காப்பிரைட்] [விலை அணா

171728

உ

சரசுவதி துணை.

# முகவுரை

ஐயன்மீர்,

பழமதுரைப் பாண்டிப் பதிகம் என்னும் சிறுபுத்தகம் இது. முச்சங்க ஆராய்ச்சிகொண்டு எழுத நேர்ந்தமையாலும் பாண்டிச்சரிதமும், பாண்டிமுனியின் சரிதமும் உலகம் தெரிந்து கொள்ளவேண்டிய தவசியமாகையாலும் பண்டிதரும், பாமரரும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி பதினான்கு சீராலாகிய, இரட்டை ஆசிரிய விருத்தத்தில் எழுதிமுடித்த நூல் ஆகும். இது ஆதித் தென்மதுரை போகபாதியில்வந்த கபாடபுரமும் போக, அதன்பின்னே ஏற்பட்ட தென்மதுரை யென்ற நாடு பழமதுரை என்ற பேரால் இன்னும் விளங்கி வருகிறது.

இதுதான் பழமதுரை யென்பதற்குபோதிய சாட்சியாய், இன்றும் அழிந்தநகர் அடையாளங்காட்டும் அநேக இடங்களும், பிறவும் இருந்தாலும் மூவேந்தர்கோட்டை வழக்கம்போல் பாண்டிநாட்டுக் கர்த்தாவாய்க்காத்த பாண்டிமுனியின் சரித்திரம் இது.

கோவலன் கண்ணகி இருவர் வரவும் பாண்டிநாடெரிந்தும், அழியாதிருந்த இடைச்சேரிதான், இந்தப் பழமதுரை. அது காத்த எங்கள் பாண்டிமுனியின் சரித்திரத்தை கால ஆராய்ச்சி கொண்டு சொன்னது. இதனைக் கற்ற வல்லோர்கள் ஆதரிப்பாராக.

---

உ

சரசுவதி துணை.

# நாட்டுச் சிறப்பு

---

முகில்பரவிக் கறுத்துமின்னி இடித்து மழை
சொரிந்துபெரு மூத்துமாரி.
மூதண்டம் வெளுக்கவைத்துப் பொதிகைமலை
உச்சியிலே முட்டியேறி.
ஜெகம்பரவும் சுருளிமலை மகாலிங்கம்
திருவடிக்கே சேர்ந்தவராய்த்.
தினம்கங்கை நுரைமடக்கி வயல்ஏறிக்
கரும்புவயல் செய்யவாழை.
முகம்பரவக் கூம்பிஎங்கும் ஆம்பல்மரைத்
தடாகமெலாம் முழுதும்பாய்ந்து.
மூத்துருட்டி மெத்தப்பனைக் கழுத்தொடித்து
வாளைமீன் மோதிப்பாயும்.
திகம்பரனுர் சொக்கலிங்கம் மீனுட்சி
அம்பிகையால் தவத்தால்வந்த.
தென்மதுரை வைகைநதி சரவணக்கவிக்கடல்
ஜெனித்த நன்னுடே.

---

171728
3

உ

சரசுவதி துணை.

# பழமதுரைப் பாண்டிப் பதிகம்

## காப்பு வேண்பா.

பாண்டித் திருநாட் டார்பார்க்கும் பழமதுரைப்
பாண்டிமுனியே—பதம்பணிந்தேன்
வேண்டி தினம் உன்னைப் பணிவார்க்கே
உள்ளதெல்லாம்—நல்லது செய்
பின்னையும் நல்செல்வந்தா—பேசு.

## நூல்

## இரட்டை ஆசிரிய விருத்தம்

அண்டாண்ட கோடிமுதல் யாவையும் காத்தருளும்
அகிலாண்ட பரமேஸ்வரி—
ஆனந்த மானமிகு மீனாட்சியே உனது
அடிமைநான் காத்தருள்புரி
தண்டாண்ட சூரன்முதல் யாவரும் உன்பாதம்
தாங்கிநிற்கச் செய்தாய் நீ
தாயேமுன் மூன்றுமது ராபுரி வந்தவகை
தான்வந்த வரலாறிலே
கொண்டாடும் தென்மதுரை முதல்கொண்டு போனது
குறைகடல் எழுப்பி முதல்நாள்
குவலயம் எல்லாம்புகழ வந்தபர தெய்வமே
கொண்டாடுந் தெய்வம் அலவோ
பண்டுகொண் டின்றுமுதல் பாவையர்கள் கோவைமிதழ்
பாவிப்பதைக் கொண்டவா
பழமதுரை அழகுபெற வளரும்ஒரு கிழவமுனி
பாண்டிமுனி எம்தெய்வமே. (1)

சடாமுடி தரித்தபல சடைமுனிகள் உண்டெனினும்
சாமியுன் போல் இல்லையே
சரீரம் பெருத்ததால் கண்டபலன் இல்லையே
சரணார விந்தம் சரணம்
படாதுமுனி பேய்கொண்ட பேர்க்கெல்லாம் நல்லவருள்
பார்க்குமுன் தந்தருளும் நீ
பாவிநான் என்றுன்னைக் கண்டபோ தும்விட்ட
பாவம்ஏதோ தெரிகிலேன்
அடாதுசெய் தார்கள்உல கேருது பட்டவினை
அனைத்துமே கண்காட்சியாம்
ஆனசந் யாசிவடி வானஉன் திருரூபம்
அடிமைநான் என்றுமறவேன்
படாதுபட் டதுபோல கோலமொரு செய்கையொரு
பட்டுநின் றருளுமுனியே
பழமதுரை அழகுபெற வளரும்ஒரு கிழவமுனி
பாண்டிமுனி எம்தெய்வமே. (2)

இரண்டாயிரத்து பத்துநாற் றூண்டு முன்பதாய்
இருந்தவிடந் தன்னிலே நீ
இன்றும் இருந்தா சாளுகின் றனே
எங்கள்போல் அடிமைபல பேர்
திரண்டுவந் தாலுமவர்க் குள்ளதெல்லாம் செய்யும்
தெய்வமாப் பாண்டிமுனியே
திரேகமே பூதமே யாயினும் கருணையில்
சிற்சத்திரூபம் அலவோ
புரண்டாண்டு வந்தகே ரளசோழ ராச்சியம்
புன்மைகண்டு மேலுமேல்
பொருந்தாமல் நல்லவழி செய்தஉன் திருநாமம்
புலவோர்கள் என்று மறவார்
பரண்டாண்டு கொண்டஅப் பாண்டிமன்னன் கோபம்
பார்க்க முடியாத அரசே
பழமதுரை அழகுபெற வளரும்ஒரு கிழவமுனி
பாண்டிமுனி எம்தெய்வமே. (3)

முதற்சங்கம் ஒன்றுபோய் இடைச்சங்கம் ஒன்றதாய்
முளைத்திட்ட கபாடபுரியும்
முன்வந்த வெள்ளமதில் தன்னிலைமை யறியாது
மூர்க்கமாய் வந்தசமயம்
அதற்கங் கிடங்கெடா தானதென் மதுரையில்
அச்சங்கம் ஸ்தாபிக்கவே
அஞ்சஞ்சு அஞ்சஞ்சு ஒன்றுகுறை யாகவதில்
அனுப்பிவைத்தார் உன்னையே
எதற்கிங்கு பெண்மோகம் கொண்டவர் எல்லாம்பெரிய
இடரில்பட்டார் என்னவே
இருக்கையில் நீயும் அறியாததோ நீசெய்தால்
ஏழைநான் என்ன சொல்வேன்
பதக்கரெத் ஞபரண மகுடாதிபூ ஷிதா
பாலன்நான் என்னைமறவேல்
பழமதுரை அழகுபெற வளரும்ஒரு கிழவமுனி
பாண்டிமுனி எம்தெய்வமே. (4)

ஆண்டிசிவ ராஜயோகங் கொண்டபோ துடலம்
ஆனவடிவாய் இருந்தும்
அல்லிதாமரை பிச்சி செல்வமுறு நீலமும்
அணிகின்ற தெய்வம் அலவோ
வேண்டியுன் பாதார விந்தமே வேண்டியும்
வேண்டியும் வந்துபணிவார்
வினையெல்லாம் தீர்த்தருள் உன்மேலும் உண்டான
மெனிமாலை சொல்ல எளிதோ
பூண்டிருந் திட்டஉன் பூமாலை சொல்லவும்
பூப்பேரும் சொல்ல எளிதோ
புண்ணிய கடாட்சண்ய தீட்சண்ய சாமிஉன்
பொற்பாதம் என்றுமறவேன்
பாண்டிநன் ஞட்டுமூன் ருனஅவ தாரத்து
பழமைபெறவந்த முனியே
பழமதுரை அழகுபெற வளரும்ஒரு கிழவமுனி
பாண்டிமுனி எம்தெய்வமே. (5)

17177

நோய்தீர வேண்டுவார் வினைதீர வேண்டுவார்
நூறு நூறுனபல பேர்
நுட்பமாய்ச் செப்பமுற உன்னடிக் காதார
நுண்மலர்கள் கொண்டு வருவார்
ஆய்ந்திதனில் அவர்அவர்க் குள்ளபடி செய்துவரும்
ஆண்டவன் மகிமை எளிதோ
அல்லாமல் சொல்லுவர்கள் சொல்லெலாம் கார்க்கும்உன்
அற்புதச் சீட் டெளியதோ
பேய்கொண்ட பேர்க்கெலாம் பேயோட்டி வாழ்வுதரும்
பெரியதாம் தெய்வம் அலவோ
பேர்சொன்ன போதிலே ஊர்நிற்கு மோஉனது
பெருமைநான் சொல்ல எளிதோ
பாய்வுகொண் டேறிவரு வரால்மீன் குதித்திடும்
பழையகரை அது காத்திடும்
பழமதுரை அழகுபெற வளரும்ஒரு கிழவமுனி
பாண்டிமுனி எம்தெய்வமே. (6)

17172

அந்தநாள் ஒருகாவ லாகவந்தாய் இன்றும்
ஆண்டவனும் ஆக வந்தாய்
அல்லாமல் சொல்லுவர் சொலார்க்கெலாம் நல்லருள்
அநுக்கிரகம் செய்ய வந்தாய்
எந்தநாள் உன்னை நான் மறந்தநாள் இல்லைஇல்லை
என்என்னை நீ, மறந்தாய்
எப்போதும் தப்பாது நினதுநெஞ் சத்தினில்
நினைத்து வைப்பாய் அப்பனே
பந்தமற் றுனஒரு பரதேசி ரூபமே
பார்க்க நேர்சொல் தெய்வமே
பாதங்கள் அன்றி துணையே துங்கள் பாதமே
பணிகுவேன் பாதுகார் நீ
பந்துபோல் கொங்கைமார் பலபேர் இருக்கினும்
பார்க்காத யோக ஞானி
பழமதுரை அழகுபெற வளரும்ஒரு கிழவமுனி
பாண்டிமுனி எம் தெய்வமே. (7)

O2998:58.2
N35

பித்தாயிரத்து முன்னூற் றறுபதுக்கு மேல்
பழமதுரை தான் இல்லையே
பழமதுரை கோவ லன்காலம் இரண்டாயிரம்
பார்க்கவும் வந்த தலவோ
எத்தாலும் நீயன்றி ஞாயம்செயா விடில்
இம்மதுரை எம் மதுரையோ
எமக்குனது பாதம்அல் லாமல்துணை வேறேயோ
என்னையொரு கண்பாரு நீ
செத்தாலும் பின்னும் பிறந்துன்னை விட்டிடேன்
தெய்வமே ஆகையாலே
சிந்தித்த போதிலே சிந்தித்த யாவையும்
சித்திக்க அருள் புரிகுவாய்
பத்தான ரூபம் எடுத்திட்ட மாயனே
பழையநூல்பூண் மார்பனே
பழமதுரை அழகுபெற வளரும்ஒரு கிழவமுனி
பாண்டிமுனி எம் தெய்வமே. (8)
காட்டில் உன்னைவிட்ட காரணம் என்னவோ
கனகமகு டாதிபதியார்
கனபாண்டியர் கள்ஆறு பத்துபேர் அரசாட்சி
கண்டநாடி தில்லையோ
பாட்டிஅபி ராமிமுதல் மேட்டிமையில் ஏறிவரும்
பலஆயிரக் கணக்கில்
பார்வதி மீனாட் சியாம் அம்பிகை
பாதம் தொழுதை யலவோ
நாட்டினில் மூவடி ஏரிகரைப் பனையடி
நல்ல செல்வம் பொருந்தும்
ஞானகரத் துமாமுனி யந்தவே தாந்த
நல்லமுத மான முனியே
பாட்டினில் எங்கும்வளர் மதுரை நன்னாட்டினில்
பலம்ஓங்கும் தெய்வகுருவே
பழமதுரை அழகுபெற வளரும்ஒரு கிழவமுனி
பாண்டிமுனி எம் தெய்வமே. (9)

தேங்காய் பெருத்ததென ஓங்கிவளர் கொங்கையார்
 தினம்உன்னைப் பணிய வரவும்
சிந்தையுங் கலங்காமல் வந்தவர்க் கருள்கின்ற
 தெய்வம் நீயலவோ சொல்
ஓங்கார மானசிவ ஞானரூபங் கொண்ட
 உத்தமன் நீயலவோ சொல்
உன்னைப் பணிந்தவர்க்கு என்னகுறை யோர்நாளும்
 உண்டாகுமோ நீயே சொல்
ஸ்ரீங்கார ரீங்கார மூலாதா ரத்துவளர்
 சின்ன ஊங்கார முதலாய்
சேர்கின்ற ஐங்கோண வட்டத்து முதலான
 தெய்வமாம் பாண்டி முனியுன்
பாங்கான சக்கரமிதை யடைத்திட்ட பேர்களைப்
 பாவம் பொறுத் தாளுவாய்
பழமதுரை அழகுபெற வயரும்ஒரு கிழவமுனி
 பாண்டிமுனி எம் தெய்வமே. (10)

---

## பழமதுரைப்பாண்டி ஆனந்தக்களிப்பு

பழமதுரைப் பாண்டிமுனி கோவில் — சென்று
பார்த்தவருக் கெந்நாளும் நீடித்தஆயுள்
பதினாறுசம்பத் துண்டாகும் — எங்கள்
பாண்டிமுனி பேர்சொல்ல துன்பம்விட்டேகும் (பழ)

பொல்லா வியாதியுந் தீரும் — கெட்ட
புண்பட்ட மேனியது பொன்போலமாறும்
எல்லாம் அநுகூலமாகும் — பாண்டி
எங்கள்துரை பேர்சொல்லி வாழ்வதுயூகம் (பழ)

பூரணச் சந்த்ரமுக மானே — நாமும்
போய்துதித்தே மீண்டுவருவங்கேள் தேனே
தோரணங்கள் அரசிலையைப் போலே — அங்கே
தோற்றுதே அனந்தசிறு தென்றல்தேராளே (பழ)

சின்னமணி பெரியமணி பாரு — அங்கே
சித்திரவி சித்திரமாய் தொங்குதே நூறு
அன்னமே அவைகள்பல பேரு — எண்ணம்
அநுகூல மானதிலே கட்டியது பாரு (பழ)

ஒவ்வொரு மணிக்குமேல் அச்சு — எழுத்
தொன்றென்று போலாகத் தீட்டிவைத்தாச்சு
செய்ய தாமரைவரா மானே — நமது
திருப்பாண்டிமுனிக் கதையைசொல்லுவேன் நானே (பழ)

சங்கம் புதாரடியே தேனே — கடைச்
சங்கம்முதற் கொண்டது விருந்ததடி மானே
எங்கும்பார் பொன்வெள்ளிக் காசு — வந்து
என்னென்னும் முன்னாலே வாரியதை வீசும் (பழ)

கையால் பொறுக்கியவர் கோடி — இன்னும்
காணுவாய் தென்மதுரை நாடலர்கள் ஓடி
ஐயா நீ, பாண்டியெனப் பாடி — இன்னும்
ஆயிரம் ஆயிரம் கோடான கோடி (பழ)

பழமதுரை மேலான கோட்டை — நின்று
பார்த்தது கிழக்காகப் பாண்டிநன் னாட்டை
கிழவன்வடி வானாலும் யோகம் — கொண்ட
கெம்பீரப் பாண்டிமுனி பாதம்பணி யோகம் (பழ)

தானாக வேவந்து கூடும் — அவர்
சடாபாரம் பூமாலை வண்டுவந்து பாடும்
தேனாறு மார்பினிலே ஓடும் — இந்த
ஜெகமெலாம் பாண்டிமுனி பேரைக்கொண்டாடும் (பழ)

உண்டுபார் குறிஞ்சியிலே மீறி — நீரும்
உள்ளதது பேர்சொன்னால் வண்டியூர் ஏரி
கொண்டகால் ஓடையொரு சாரி — நாம்
குளித்துப்போய்ச் சேருவோம் பாண்டியனைக்கோரி (பழ)

புளிமா மரத்துநிழல் வேலே — மரம்
பொன்பூத் திருந்தது போலாக மேலே
கழியொன்று பாலத்தி னாலே — வரும்
காட்சியைக் காணடி நீ தேவி பெண்ணாலே (பழ)

பட்டணங் கோட்டையடி வாசம் — அந்தப்
பழமதுரை உண்டான காலமடி நேசம்
பட்டுப் படாததது மோசம் — நமது
பாண்டிமுனி செய்துவரும் நல்லட்ட காசம் (பழ)

நாற்புரமும் சுற்றிவயல் உண்டு — அதில்
நாற்றுப் பறிப்பவர்கள் கண்டுபயங் கொண்டு
வேற்றுமை எண்ணுமல் இன்றும் — வந்து
வேண்டிப்பே யாடுவதைக் கண்ணுலே கண்டும் (பழ)

பொங்கல் இடுவார்கள்பல கோடி — அந்தப்
புதுப்பொங்கல் வந்தஉடன் குலவையைப் பாடி
அங்குவரு வோர்கள் கொண்டாடி — என்ன
ஆச்சரியம் சொல்லுவேன் பேச்சில்லைபோடி (பழ)

ஐந்துவய துக்குழந்தை ஆதி — வரும்
ஆண்பெண் ணும் பாண்டிமுனி பேரையேஓதி
வந்துவந் தேற்றும்பிர க்யாதி — இந்த
மண்டலம் தன்னில்ஒரு பாண்டிமுனிசேதி (பழ)

பேயாட வருவோர்கள் நூறு — கொண்ட
பில்லிசூ னியந்தள்ள வருவோர்கள் நூறு
பேயோடச் செல்வோர்கள் நூறு — எங்கள்
பேர்ப்பெரிய பாண்டிமுனி பேரையேகூறு (பழ)

தென்னங் குரும்பைஇள நீரோ — என்று
சிந்திக்கச் சந்தேகம் செப்பெனவே யாரோ
அன்னமே சொல் ஒப்பு வாரோ — எந்தன்
ஆசைக் கிசைந்திட்ட பெண்ணே ஓர்வாரோ (பழ)

இரண்டுகால் சம்மணங் கூட்டி — கை
இரண்டையும் விரல்ஒன்று சேர்த்தங்கு காட்டி
திரண்டபத் மாசனம் பூட்டி — வந்த
தெய்வம்எங்கள் பாண்டிமுனி பேரால்பேய் ஓட்டி (பழ)

போதைப் பூசாரியைப் பாரு — நல்ல
புண்யவான் பெயர்குலம் காப்பவன் தேறு
சாதுமனப் பாண்டிமுனி பேரு — சொல்லித்
தந்திரமாய்ப் பிழைப்பார்கள் பலகோடி பேரு (பழ)

கிழக்கேபார் பெரியதோர் ஏரி — வட
கீழ்க்கரையில் ஊற்றுள்ள கிணறுண்டுஏரி
ஆள்மதிக்கத் தேவையில்லை தண்ணீர் — அங்கே
ஆழச்சமுத்திரமும் இதற்கீடே இல்லை (பழ)

யானைக் கொம்பைப் போல மீசை — கொண்டு
யாவரும் கால்பணியச் செய்கின்றஆசை
தேனே என் திரவியமே பாரு — பாண்டி
திருமுகத்துக்கீடு எங்கேயடி கூறு (பழ)

ஆலோல வட்டங்கள் பாரு — பின்னே
அடிசுற்றி வலம்சுற்றி வருவார்கள் நூறு
கால்வாயின் தண்ணீரைப் பாரு — உனது
கண்ணிலே ஒற்றிக்கொள் வினைஎல்லாம் தீரு (பழ)

ஆஜானு பாகசிவ யோகன் — எல்லாம்
ஆருதா ரத்தில்கடந் திட்ட விவேகன்
ராஜாதி ராஜசுக போகன் — பாண்டி
ராச்சியம் மெச்சிவரும் பாண்டிமுனி யோகன் (பழ)

திருநீற்றுப் பட்டமும் வெள்ளி — அவன்
செங்கண் இரண்டதுவும் கொண்டதுவும் வெள்ளி
சிறுதாடி மீசையதும் வெள்ளி — எங்கள்
செந்தமிழ்ப் பாண்டிமுனி பேர்அதனைச் சொல்லி (பழ)

மங்கள சுகானந்த யோகம் — பாண்டி
மாமுனிவன் வைத்தபடி யாகும்சம் போகம்
கங்கைவரு சரவணையை வேண்டி — பாடும்
கவிராயன் வேல்ச்சாமி போற்றிடும் பாண்டி (பழ)

---

மங்களம்! மங்களம்!! மங்களம்!!!